கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் (வடமாகாணம்)
கைதடி
சுற்றறிக்கை 02/2013

சகல பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினதும்,
சகல பனை தென்னைவள கூட்டுறவு சங்கங்களினதும்,
சகல 2ம்படி கூட்டுறவு சங்கங்களினதும்
தலைவர்கட்கு.

**பலநோக்கு கூட்டுறவு சங்கங்களினதும், பனை தென்னைவள கூட்டுறவு சங்கங்களினதும் 2ம்படி கூட்டுறவு சங்கங்களினதும் மற்றும் பாரிய சங்கங்களினதும் தலைவர் படியினை மாற்றியமைத்தல்.**

வடமாகாணத்தில் உள்ள மேற்படி கூட்டுறவு சங்கங்களின் பொதுச்சபையால் தெரிவு செய்யப்பட்ட நெறியாளர் குழுவின் தலைவர்கட்கு 01.08.2013 ந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் கூட்டுறவு சங்கத்தின் மொத்த மேல் மிகை அடிப்படையில், உச்ச எல்லைக்கு மேற்படாதவாறு தலைவர் படியினை வழங்கலாம். இதற்கு முன் மேற்படி சுற்றறிக்கை தொடர்பில் வெளியிடப்பட்ட 24.09.2007 ந் தேதிய 05/2007 சுற்றுநிருபம் இரத்துச் செய்யப்படுகின்றது.

| மாதாந்த மொத்த மேல்மிகை | மாதாந்தம் வழங்கக் கூடிய உச்ச அளவு(ரூபா) |
|---|---|
| 1) ரூ. 25,000/= வரை | 2500/= |
| 2) ரூ. 25,001/= லிருந்து ரூ. 50,000/= வரை | 2750/= |
| 3) ரூ. 50,001/= லிருந்து ரூ. 75,000/= வரை | 3000/= |
| 4) ரூ. 75,001/= லிருந்து ரூ. 100,000/= வரை | 3500/= |
| 5) ரூ. 100,001/= லிருந்து ரூ. 150,000/= வரை | 4000/= |
| 6) ரூ. 150,001/= லிருந்து ரூ. 200,000/= வரை | 4500/= |
| 7) ரூ. 200,001/= லிருந்து இற்கு மேல் | 5000/= |

குறிப்பு : மாதாந்த மொத்த மேல்மிகை அல்லது மொத்த குறைவு என்பது ஒரு சங்கத்தின் ஒவ்வொரு வியாபார தொழிற்பாட்டு பிரிவுகளிலிருந்து பெறப்படும் மொத்த வருமானத்திலிருந்து அவ்வப்பகுதிகளுக்கான சகல நேர்ச் செலவுகளும் கழித்து பின்னர் கிடைக்கப் பெறும் மிகுதிகளினதும் கூட்டுத் தொகையாகும்.

சங்கத்தின் பொதுலாப நட்ட கணக்கிற்கு, வைப்புகள் மீது கணிக்கப்படும் வட்டி வருமானத்தினை போன்ற வருமானங்கள், பொது நிர்வாக செலவுகள் போன்றன மேல்மிகை கணிக்கும் போது கணக்கில் சேர்க்கப்படலாகாது.

சங்கத்தின் மொத்த மேல்மிகையை சரியாகத் தயாரிக்க வேண்டியது பொது முகாமையாளரினதும் கணக்காளரினதும் கடமையாகும்.

தலைவர் படி வழங்குகையில் பின்வரும் வரையறைகள், நிபந்தனைகளை கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

1) ஒரு கூட்டுறவு சங்கம் மாதாந்தம் மேல்மிகையை ஈட்டாது. நட்டத்தில் இயங்கும் நிலைமைகளில் மேற்கூறப்பட்ட அட்டவணையில் காணப்படும் ஆகக் குறைந்த தொகையானது ரூபா: 2500/= இனை மட்டும் தலைவர் படியாக தனது செய்கடமைகட்குப் பெற்றுக் கொள்ளலாம்.

2) உச்சநிலை கூட்டுறவு சங்கமொன்றின் தலைவருக்கு கடமை பொறுப்பின் அடிப்படையில் மேற்குறித்த எல்லைகளை கருத்தில் கொள்ளாது படிகள் வழங்கலாம் எனினும், அப்படியை வழங்க ஒரு சங்கம் கருதுமாயின், அதன் பொதுச் சபையின் முன்னனுமதியுடன் எனது முன்னனுமதியையும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

3) 3.1 ப.நோ.கூ.ச.அல்லது ப.தெ.வ.கூ.ச அல்லது பாரிய கூட்டுறவு சங்கமொன்றில் தெரிவு மூலம் பதவிக்கு வரும் தலைவர் ஒருவர், அரசாங்க உள்ளூராட்சி, கூட்டுத் தாபன உத்தியோகத்தராக இருப்பின் அட்டவணையில் குறிப்பிட்டவாறு தனது படியினை மாதாந்தம் பெற்றுக் கொள்ளலாம்.

3.2 3.1 ல் கூறப்பட்டவாறான, தலைவர் படியினை மாதாந்தம் பெறும் குறித்த உத்தியோகத்தர்கள் தாபன விதித் கோவை தொகுதி-1 அத்தியாயம் IX ம் பிரிவு 2ன்படி பெற்றுக் கொள்ளும்படியின் 10% இனை திரட்டிய நிதிக்குச் செலுத்துதல் வேண்டும். இவ்வாறு கழிக்கப்படும் 10% நிதி முறையே அவ்வவ் உத்தியோகத்தர்களது திணைக்கள தலைமை அலுவலகங்களுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

3.3 அரசாங்க அல்லது உள்ளூராட்சி, அல்லது அரச கூட்டுத்தாபன உத்தியோகத்தர் ஒருவர் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கும் உரித்தான அதிகாரங்களின் பிரகாரம் தலைவரின் பதவிக்கு பெயர் குறித்து நியமிக்கப்படின், அவர் தனது திரட்டிய சம்பளத்தின் $\frac{1}{3}$ பங்கு அல்லது ரூபா. 2500/= இவற்றில் எது குறைவோ அத்தொகையை மாதாந்தம் தலைவர் படியாகப் பெற்றுக் கொள்ளலாம். இவற்றினை வழங்கமுன் 3.2 ம் பந்தியில் குறிப்பிட்டவாறு திரட்டிய நிதிக்கு 10% கழித்த பின்னருள்ள மீதித் தொகையை வழங்க வேண்டும். இவ்வாறு கழித்த 10% தொகையை மேல் குறிப்பிட்டதற்கிணங்க சம்பந்தப்பட்டவர்கட்கு அனுப்பி வைக்க வேண்டும்.

4) ஒன்றுக்கு மேற்பட்ட ப.நோ.கூ.சங்கம் அல்லது ப.தெ.வ.கூ.சங்கம் அல்லது பாரிய கூட்டுறவுச் சங்கங்களில், சம காலத்தில் ஒருவர் தலைவராக புரிவாராயின் அல்லது அவர் தமக்குரிய படியினை ஒரு சங்கத்திலோ அல்லது பொருத்தமான விகிதாசாரத்தில் தலைவராகப் பணிபுரியும் சகல சங்கங்களில் இருந்தோ பெற்றுக் கொள்ளலாம். எவ்வாறாயினும் தான் தலைவராக பணிபுரியும் சகல கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து பெறப்படும் தலைவர் பதவியானது மேல் அட்டவணையிலும் பந்தி. 1,2, 3 இல் குறிப்பிட்டதற்கமைய அதாவது ஒரு உச்ச எல்லைக்கு மேற்படலாகாது. சம்பந்தப்பட்ட சங்களின் மொத்த மேல் மிகைகளின் அடிப்படையில் உச்ச எல்லை தீர்மானிக்கப்படல் வேண்டும்.

5) தலைவர்படி வழங்குவது தொடர்பாக மேல் அட்டவணையிலும், 1,2,3,4 பந்திகளில் கூறப்பட்டவாறான உச்ச எல்லைக்கு அமைவாகப் பெறக் கூடியவாறு சங்கத்தின் நடைமுறைவிதியை தயாரித்து பொதுச்சபையின் அனுமதியுடன் மாற்றம் செய்யப்பட வேண்டும். சங்கத்தின் பொதுச்சபை செயலிழந்து காணப்படின் இயக்குனர் சபையின் அனுமதியுடன் எனது அனுமதியைப் பெற்று கொடுப்பனவை மேற்கொள்ள முடியும்.

6) சங்கமொன்றின் தலைவர் ஒருவர் சுகவீனம் அல்லது விசேட காரணங்களுக்காக நீண்ட காலம் கடமைக்கு சமூகமளிக்க முடியாவிடத்து அச்சங்க உபதலைவர் ஒரு மாதத்திற்கு மேலாக பதில் தலைவராகக் கடமையாற்றுவாராயின், அவர் இயக்குனர் சபையின் அனுமதியுடன் குறித்த ஒரு முழுமாத தொகையினை மட்டும் படியாகப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் குறை மாதங்கள் பேரில் எடுக்கப்படலாகாது.

7) தலைவர் படியினை வழங்கமுன் அந்த மாதத்திற்கான படிவம் 28 / படிவம் 128 (மாதாந்த முகாமைப்படிவம்) சங்கத்தின் இயக்குனர் சபையின் கூட்டத்தில் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு உறுதிப்படுத்திய பின் தலைவர் படியினை பெற்றுக் கொள்ள முடியும். இக் கொடுப்பனவானது எவ்வகையிலும் முற்பணமாக வழங்கப்படக் கூடாது என்பதுடன் வேறு எக் கொடுப்பனவுக்கும் எதிராக சீர் செய்தலாகாது.

8) சங்கத்தின் தலைவர் ஒருவர் நாளாந்த கடமைகளை மேற்கொள்வதற்காக சங்கத்திற்கு வீட்டிலிருந்து பிரயாணம் செய்தமைக்கான படி எதனையும் பெற்றுக் கொள்ளலாகாது.

9) இக்கொடுப்பனவுகளை வழங்கக்கூடிய பதிவு செய்யப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் விபரங்கள் பின்வருமாறு :

1) ப.நோ.கூ.சங்கங்கள்
2) ப.தெ.வ.கூ.சங்கங்கள்
3) ப.தெ.வ.கூ.சங்கங்களின்கொத்தனி.
4) மாவட்ட கூட்டுறவு சபைகள்
5) மற்றும் ஏனைய 2ம் படி கூ.சங்கங்கள்.

10) மேலே குறிப்பிடப்படாத கூட்டுறவு சங்கமொன்றின் தலைவருக்கு அட்டவணையில் காட்டியவாறு படி வழங்க விரும்பின், அச்சங்கம் தனது நிதிநிலைமையையும் பாரிய சங்கம் என நிரூபிக்க கூடியவாறுள்ள சான்றுகளையும் தீர்மானங்களையும் கூட்டுறவு ஆணையாளருக்கு சமர்ப்பித்து அவரது அனுமதியைப் பெற்ற பின்னரே அவ்வாறான கொடுப்பனவு ஒன்றை வழங்க முடியும்.

திருமதி.மதுமதி வசந்தகுமார்
கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும்
கூட்டுறவுச்சங்கப்பதிவாளரும் (வ.மா)

பிரதி : 1) சகல கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள்:
கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் இக் கொடுப்பனவு கண்காணிக்கப்பட வேண்டும் என்பதுடன், கணக்காய்வின் போதும் கணக்காய்வாளரால் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்பதனையும் தாங்கள் அறிவுறுத்துவதற்காக.

2) அதிபர், மாகாண கூட்டுறவு பயிற்சி நிறுவனம்.